25 OCT 1975
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1975, ஏப்ரல் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 641, 642, 643 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Government Dispensary, Saidapet

*644 *Q.*—Thiru K. M. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the increase in the number of out-patients treated at the Government Dispensary at Saidapet; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சைதாப்பேட்டை அரசு மருந்தகம் 1973ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து தேவைக்கேற்ற அலுவலர்களைக் கொண்ட 32 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவ மனையாக மாற்றப் பட்டு இயங்கி வருகிறது.

Thiru K.M. SUBRAMANIAM : My question refers to the number of out-patients treated in the hospital. Is it a fact that there are more than 1,500 out-patients attending every day and that there are only three doctors and each doctor has to attend about 150 patients per hour. Is it possible? Are the Government thinking of increasing the number of doctors?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் புற நோயாளிகள் ஆயிரம் பேருக்குமேல் ஒவ்வொரு நாளும் வருகிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. மருத்துவ அலுவலர் ஒருவரும், பெண் மருத்துவ அலுவலர்கள் இரண்டு பேரும், வேறு மருத்துவ மனையிலிருந்து இந்த மருத்துவ மனைக்கு

' பார்ட்-டைம் ' ஆக வருகிற டாக்டர்கள் சிலரும் இருப்பதாக நான் பேசுகிறபோது தெரிந்துகொண்டேன். இராயப்பேட்டை மருத்துவ மனையிலிருந்து வருவதாக இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்கள். பார்ட்-டைமாக வருகிறவர்கள் புற நோயாளிகளைக் கவனிப்பதற்குத்தான் வருவார்கள். அப்படி இல்லையானால் மேலும் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சைதை பக்கத்திலே அமைந்திருக்கிற இந்த மருத்துவ மனைக்கு வருகிற புற நோயாளிகள் உள்ளபடியே மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த மருத்துவ மனையை மேலும் அபிவிருத்தி செய்து அங்கு வருகின்ற புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அரசு வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு, நான் முன்னரே சொன்னதைப் போல், பரிசீலனை செய்து கவனிக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் உள்ள இந்த மருத்துவ மனைக்கு ஒவ்வொரு நாளும் அதிக அளவில் புற நோயாளிகள் வருகிறார்கள். ஆகவே, இதில் ஒரு நிரந்தர பரிகாரம் காண்பதற்கு அங்கே பணியாற்றுகின்ற டாக்டர்களோடு, இன்னும் கூடுதலாக சில டாக்டர்களையும் இதர மருத்துவப் பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரசு மறுபரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வி திரும்பத் திரும்ப அதேதான் ; விடையும் அதேதான்.

Nurses Association

*645 *Q*.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government Nurses Association has demanded during 1974 a higher uniform and ration allowance and more selection grade posts; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசு செவிலியர் சங்கம் செவிலியர்களுக்கான உணவுப்படி, சீருடைப்படி உயர்வும், அதிகப்படியான தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்தவும் கேட்டுள்ளன. ஏற்கெனவே அரசு ஒப்புக்கொண்ட அந்த அடிப்படையில் மேலும் என்ன செய்ய இயலும் என்பது ஆய்வில் உள்ளது.